மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இதெல்லாம் தனியார் ஆலைகள். அரசாங்கத்திற்குச் சம்பந்தமில்லை. ஆலைகளுக்கு உரிமம் வழங்குவதில் கட்டுப்பாடு இருந்தது, இவ்வளவு உற்பத்தியாக வேண்டுமென்று கணக்கிட்டு வழங்கி வந்தார்கள். இந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்தியிருப்பதால் அவரவர்கள் ஆலைகள் போடுவதற்கு உரிமை பெற்றிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, பல ஆலைகள் மூடப்பட்டிருப்பதால் இனிமேல் ரைஸ் மில்களுக்கு லைசென்ஸ் இல்லை என்ற உத்தரவு பிறப்பிக்கப்படுமா, மாட்டாதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அப்படிப்பட்ட உத்தேசமில்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இப்படி அரிசி ஆலைகள் மூடப்பட்டுக்கிடப்பதைப்பற்றிப் பதில் சொன்னார்கள் அமைச்சரவர்கள். லைசென்ஸ் கொடுப்பதன்மூலம் இப்படிப் பெற்றுக்கொண்டே ஆலைகளைக் கட்டிக்கொண்டே போவது, மூடிக்கொண்டே போவதுமாகயிருப்பதால் அரசாங்கம் ஏன் லைசென்ஸைக் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே இப்படி உரிமம் வழங்குவது மாவட்ட ஆட்சி மன்றத் தலைவருக்குத்தான் இருக்கிறது. அவர்கள் கண்காணித்து உரிமம் வழங்குகிறார்கள்.

அரிசி ஆலைகள் அமைக்க உரிமம்

* 539 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:

வட ஆற்காடு, செங்கற்பட்டு, தருமபுரி மாவட்ட எல்லைகளை ஒட்டி 15 மைல் தூரத்தில் அரிசி மில்கள் அமைக்க அனுமதி வாங்க வேண்டியதில்லை என அரசு ஆணை வழங்கியுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்த ஏற்பாட்டை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இது மாநிலம் முழுவதும் கொண்டுவர இயலாத ஒன்றாகும். வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்ட ஓரங்களில் 15 மைல் பெல்ட் ஏரியாவாக வைத்து நாம் கொடுக்கும் உரிமங்களைத் தளர்த்தியிருக்கிறோம். ஆனால், கன்னியாகுமரி, மதுரை, கோவை இதுபோன்ற எல்லையோரங்களில் ஆலைகளுக்கு உரிமங்களை வழங்குவதை அரசாங்கமே வைத்திருக்கிறது. 15 மைல்களுக்கு உட்பட்ட இடங்களில் அனுமதி வழங்க வேண்டுமென்றால் அரசாங்கத்திற்கு மனுச் செய்துகொள்ளவேண்டும். இந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்துவதாக

1971 ஜூலை 29]

இல்லை. அதற்குக் காரணம், நிறைய ஆலைகளுக்கு உரிமங்கள் வழங்குவதினால் கள்ளக்கடத்தலுக்கு ஏதுவாக இருக்கும். எனவே அந்தக் கட்டுப்பாட்டை அரசாங்கமே வைத்திருக்கிறது.

திரு. இ. எஸ். தியாகராாசன்: தலைவரவர்களே, இந்த உத்தர வால் ஏற்கனவேயுள்ள அரிசி ஆலைகள் பாதிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நிச்சயமாகப் பாதிக்கப் படாது.

திரு. ஏ. ஆர். சுப்பையா: தலைவரவர்களே, 15 மைல் என்பது குறைக்கப்படுமா? அப்படிக் குறைக்க வேண்டுமென்று திருநெல்வேலி போன்ற மாவட்டங்களிலிருந்து கோரிக்கைகள் வந்திருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: குறைக்கும் உத்தேசம் தற்சமயம் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, அமைச் சரவர்கள் பதில் கூறும்பொழுது கன்னியாகுமரி, கோவை போன்ற எல்லையோரப் பகுதிகளில் புதிதாக லைசென்ஸ் வழங்க அரசாங்கத் தின் அனுமதி வேண்டுமென்று சொன்னார்கள். இந்தக் கடத்தலைத் தடுக்கத் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு, இந்தப் பகுதியிலே யிருந்து தகுந்த அபேட்சைகள் வந்தால் அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அரசாங்கம் வைத்திருக்கிறது என்றால் கொடுக்க முடியாது என்று பொருள் அல்ல. மனுக்கள் வந்தால் பரிசீலித்து, எது தேவையோ அதற்கேற்றபடி செய்யலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, ரைஸ்மில்லிங் இன்டஸ்ட்ரி ஆக்ட் ஒரு சென்ட்ரல் ஆக்ட், மாகாணத்தில் சில இடங்களில் அனுமதி வழங்காமல் இருப்பதாக வழக்குகள் நீதிமன்றத்தில் இருக்கின்றனவா? அவைபற்றி அரசுக்குத் ஏதாவது தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும், வழக்குமன்றத்திலிருந்தாலும் மாகாணம் முழுவதும் அமல் ஆக்குவதற்குத் தமிழக அரசுக்கு உரிமை இருக்கிறது, அந்த உரிமையைத் தளர்த்தியிருக்கிறோம். இவற்றில் கனம் அங்கத்தினர் போன்றவர்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைத்தால் நன்றாக இருக்கும்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் பெல்ட் ஏரியா, ஆகவே கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். அதேபோல் கோயம்புத்தூருக்கும் அரசு கொடுத் தால் சௌகரியமாக இருக்கும், எனவே அங்கே பெல்ட் ஏரியா என்று வைத்துக் கட்டுப்பாடு இருக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஏற்கனவே நான் சொன்ன பதிலைக் கனம் அங்கத்தினர் அவர்கள் சரியாகக் கேட்கவில்லை என்று நினைக்கிறேன். கோவை, கன்னியாகுமரி, மதுரை என்று 3 மாவட்டங்களையும் சேர்த்துச் சொன்னேன்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, வடார்க்காடு மாவட்டம் ஓரளவிற்கு நெல் அதிகமாக, தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக, விளைகிற மாவட்டம். அந்த மாவட்டத்தின் 15 மைல் எல்லை ஓரங்களை அதாவது சித்தூர், ஆற்காட்டில் இருக்கும் 15 மைல்களைச் சுற்றி ஆற்காடும் இருக்கிறது. அந்த ஆற்காட்டுக்கும் இந்த உரிமங்களை வழங்குவதில் தகராறு செய்கிறார்கள் ஆந்திரா அருகே இருப்பதால். அதை அரசாங்கம் பரிசீலனை செய்து ஆற்காட்டிற்கு உரிமங்களை வழங்குவதில் எந்தவிதத் தொல்லையும் இல்லாமல் செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, முதலில் சொன்ன பதிலைக் கனம் அங்கத்தினர் அவர்கள் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்ட எல்லைகளை ஒட்டி 15 மைல் தூரப் பகுதியை, பெல்ட் ஏரியாவைத் தளர்த்தி, மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர் உரிமங்களை வழங்க உத்தரவு போட்டிருக்கிறது.

Jobless Engineers

* 478 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether this Government have any scheme to utilise the services of jobless Engineers for irrigation and power schemes ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

Dr. H. V. HANDE : May I know from the Hon. Minister whether the statement that has been placed here consists of the persons employed during the past several years or the persons who are now in employment or whether the Hon. Minister will be able to give us the number of persons who are employed as per my question during the last one or two years, especially because of the unemployment problem, whether this was announced by the Chief Minister in the year 1969 during the month of November—340 engineers—160 for irrigation schemes and 180 for power schemes—would be appointed for the 10 divisions? And if so, the programme divisionwar and the appointments for these divisions?

@ 336–337-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.